செ.வெ.எண்: 753 நாள்: 18.11.2020

# <u>தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளை மேம்பாடு செய்தல் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது</u>

தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நீர்நிலைகளை மேம்பாடு செய்தல் குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் பொதுப்பணித்துறை மற்றும் உள்ளாட்சி துறை உள்ளிட்ட அலுவலர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள ஏரிகள், குளங்கள், ஊரணிகள் மற்றும் வாய்கால்கள் ஆகிய நீர்நிலைகளை மேம்படுத்துவது குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களால் கலந்தாலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் உதவி ஆட்சியர் (பயிற்சி), மாவட்ட வருவாய் அலுவலர், ஊரக வளர்ச்சி துறையின் திட்ட இயக்குநர்கள் & உதவி இயக்குநர்கள், பேரூராட்சிகள் உதவி இயக்குநர், பொதுப்பணித்துறை, நிலநீர்கோட்டம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்கள், மாநகராட்சி, நகராட்சி ஆணையர்கள் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.